DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

OS. No. 76/2022

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents – PW3

| | | |
|---|---|---|
| Name | : | **தவமணி** |
| Father Name | : | வீரபெருமாள் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | பதிவுறு எழுத்தர், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம். |
| Religion | : | |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.09.2025.

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக பதிவறையில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் தாலுகா, கூரியூர் குரூப், கூரியூர் கிராமம் சர்வே எண்கள். 58/1ஏ, 58/2ஏ, 51/2பி, 61/2, 74/4பி, 73/2பி, 75/2ஏ, 95/1சி, 95/1சி4, 107/1பி1, 113/1பி, 114/3ஏ1ஏ மற்றும் 118/6பி1 ஆகிய சர்வே எண்களுக்கு செட்டில்மென்ட் காலத்தில் ஏற்பட்ட ஏ ரெஜிஸ்டர் நகல் மற்றும் பட்டா நகலை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டிருந்தது. சர்வே எண்கள். 95/1சி, 95/1சி4 தவிர்த்து இதர சர்வே எண்களுக்குரிய பட்டா மற்றும் ஏ

ரெஜிடர் நகலை தாக்கல் செய்கிறேன். மேற்படி சர்வே எண்களுக்குரிய பட்டா நகல்கள் **சா.சா.ஆ.5**. மேற்படி சர்வே எண்களுக்குரிய ஏ ரெஜிஸ்டர் நகல்கள் **சா.சா.ஆ.6**. சர்வேஎண்கள் 95/1சி, 95/1சி4 க்குரிய பட்டா மட்டுமே சிதிலமடைந்து விட்டதால்தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்படி சர்வே எண்களுக்குரிய ஏ ரெஜிஸ்டர் நகல்கள் **சா.சா.ஆ.7**.

**10 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் தாக்கல் செய்துள்ள செட்டில்மென்ட் பட்டா ஆவணங்கள் அனைத்தும் 1952ம் ஆண்டிலும் ஏ ரெஜிஸ்டர் 1960ம் ஆண்டிலும் ஏற்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண்களுக்குரிய பட்டாக்கள் தற்போது யார் பெயரில் உள்ளது என்பதற்கு எங்கள் அலுவலகத்தில் ஆவணங்கள் உள்ளது என்றால் பதிவறையில் இல்லை, ஆனால் சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் இருக்கும்.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.